**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.366/2024**

2025 ம் ஆண்டு மே மாதம் 26 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | -திருமதி.சுகன்யா | **PW-5** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | -சிவசங்கர் | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | -39 |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>-**

நான் ஈரோடு மூலப்பாளையம் மண்டப வீதியில் குடியிருந்து, வீட்டிலிருந்து வருகிறேன். சாலை விபத்தில் அடிபட்டு இறந்து போன ஹர்ஷிதா எனது மகள். அவருக்கு சம்பவ சமயத்தில் 11 வயது. 11.09.2020 அன்று வெள்ளிக்கிழமை காலை 10.20 மணிக்கு முன்பாக என் வீட்டில் இருந்து எனது இருசக்கர வாகனம் டிஎன் 33 BS 7733 என்ற இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட, என் மகள் ஹர்ஷிதா பின்னால் உட்கார்ந்து வந்தார். ஈரோடு பவானி ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி காலை சுமார் 10.25 மணி அளவில் அமராவதி நகர் பஸ் ஸ்டாப் அருகே வந்து கொண்டிருக்கும் பொழுது எனக்கு பின்னால் ஒரு அரசு பேருந்து வந்து நான் ரோடின் மேற்கு பகுதியில் சென்று கொண்டிருக்கும் பொழுது நான் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் பம்பர் மீது பின்னால் இடித்தது என்னால் நிலை தடுமாறி நான் ஒரு பக்கமாகவும், என் மகள் எதிர்பாக்கமாகவும் கீழே விழுந்து விட்டோம். அதனால் மேற்படி பேருந்தின் பின் சக்கரம் மகளின் மார்பு பகுதியில் ஏறி கீழே இறங்கியது. எனக்கு இரு கைகளில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. சம்பவ சமயத்தில் சம்பவத்தை பார்த்த என் கணவரின் தம்பி சந்திரசேகரன் ஆம்புலன்ஸை வரவழைத்து ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அவர் விபத்து குறித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். ஹர்ஷிதா மருத்துவமனைக்கு கொண்டு சென்ற வழியில் காலமாகிவிட்டார். நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை எங்கள் மீது மோதிய அரசு பேருந்தின் பதிவு எண் டிஎன் 30 என் 1206. மேற்படி பேருந்து ஓட்டிய ஓட்டுனர் பெயர் முருகேசன். அவர் விபத்து சமயத்தில் பேருந்தில் இருந்து இறங்கி வந்து என்னவென்று கேட்டார் அப்பொழுது

அவரைப் பார்த்தேன் ஆஜர் எதிரி தான் மேற்படி ஓட்டுனர். போலீசார் என் மகளின் பிரேதத்தின் மீது விசாரணை மேற்கொண்ட சமயம் நான் இருந்தேன். போலீசார் விபத்து குறித்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் ஆம்புலன்ஸில் ஜி.எச்-க்கு தனியாகத்தான் சென்றேன் என்றால் ஆமாம். என் கொழுந்தனாருடன் வரவில்லை என்றால் ஆமாம், அவர் காவல் நிலையம் சென்று விட்டார். ஈரோடு அரசு மருத்துவமனை சென்றவுடன் அவசர பிரிவில் இருந்த மருத்துவர் என்னிடம் என்ன நடந்தது என்று விசாரித்தாரா என்றால் ஆமாம். பணியில் இருந்த மருத்துவர் என் மகளை பரிசோதித்து விட்டு அவர் இறந்து விட்டதாக அவரது உடலை மார்ச்சுரிக்கு அனுப்பி விட்டார் என்றால் சரிதான். ஜி.எச்-இல் இருந்தபோலீசார் என்ன நடந்தது என்று என்னிடம் கேட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி போலீசார் நான் சொன்னதை எழுதிக் கொண்டார்களா என்றால் ஆமாம். அவ்வாறு என்னிடம் எழுதி வாங்கிக் கொண்டதில் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரிதான். மதியம் மூன்று மணி அளவில் சித்தோடு போலீசார் அரசு மருத்துவமனை வந்தார்கள் என்றால் நான் வீட்டிற்கு சென்று விட்டேன். பின்னிட்டு மூன்று முப்பது மணி அளவில் அரசு மருத்துவமனை வந்தேன். என் வாகனத்திற்கு விபத்தினால் சேதம் ஏற்பட்டதா என்றால் ஆமாம் அமராவதி நகர் பேருந்து நிறுத்தத்தின் முன்பாக ஸ்பீடு பிரேக்கர் உள்ளது என்றால் சரிதான். போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதி என்றால் சிறிது நெரிசல் மிகுந்து தான் காணப்பட்டது. நான் சொன்னவாறு விபத்து நடக்கவில்லை என்றும் நான் நிலை தடுமாறி கீழே விழுந்ததால் தான் விபத்து ஏற்பட்டது அதனால் என் மகள் வாகனத்தின் பின் சக்கரத்தில் விழுந்து அதனால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால்தான் பேருந்தின் ஓட்டுநர் என்ன நடந்தது என்று கீழே இறங்கி என்னை விசாரித்தார் என்றால் சரியல்ல. விபத்திற்கு பேருந்து ஓட்டுனர் காரணம் அல்ல என்றும் நான் தான் சாலையில் முறையாக ஓட்டாமல் நிலை தருமாறு கீழே விழுந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மோட்டார் வாகன இழப்பீடு கோர வேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு தவறான புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி தவறான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**